©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 4] சென்னை, புதன்கிழமை, ஜனவரி 27, 2016
தை 13, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு – 2047

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழில் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 233, தொழில் (MMC.2)த் துறை, நாள்: 23 செப்டம்பர் 2015.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1), (1-A) ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சிறு கனிம சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில் 12 ஆம் விதியின் (2) ஆம் துணை விதிக்குப் பதிலாகப் பின்வரும் துணை விதிகள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(2) பொதுப்பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள குளத்தின் படுகைகளிலிருந்து வண்டல் மண், சவுடு மற்றும் சரளைக் கற்களை வெட்டியெடுப்பதற்காக, வட்டாட்சியர்கள், குளங்களின் பட்டியலைத் தயாரித்து அவர்களின் செயற்குறிப்பை மாவட்ட ஆட்சியரிடம் அளிக்க வேண்டும் மாவட்ட ஆட்சியர் நேர்விற்கேற்ப பொதுப்பணித் துறையின் செயற்பொறியாளருக்கு அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையின் செயற்பொறியாளருக்கு தகுதிவாய்ந்த பகுதிகளின் எல்லைகளை வரையறுப்பதற்கும், குளங்களிலிருந்து கனிமங்களை அகற்றுவதற்கு வரையறுக்கப்பட வேண்டிய நிபந்தனைகளுடன் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வெட்டியெடுக்கப்பட வேண்டிய கனிமங்களின் அளவை மதிப்பீடு செய்வதற்கும் குளங்களின் பட்டியலை அளிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நபரின் வசிப்பிடம் அல்லது வேளாண் நிலமும் வெட்டியெடுக்கப்பட வேண்டிய இடமும் அதே வருவாய் கிராமத்தில் அல்லது அடுத்துள்ள வருவாய் கிராமத்தில் இருக்க வேண்டும் என்பதற்குட்பட்டு வெட்டியெடுப்பதற்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்து அனுமதி பெற்ற பின்னர், இந்த விதியின் கீழ் மாவட்ட **அரசிதழில்** மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கையிடப்படுகிற பொதுப்பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள குளங்களின் படுகைகளிலிருந்து உண்மையான வீட்டுப் பயன்பாடு அல்லது வேளாண் செயல்நோக்கங்களுக்காக மண், வண்டல் மண், சவுடு போன்றவற்றை விலையில்லாமல் வெட்டியெடுக்க பொதுமக்கள் அனுமதிக்கப்படலாம்.

ஆனால் குளங்களிலிருந்து வெட்டியெடுப்பதற்குக் கருதப்படும் கனிமத்தின் அளவு 30 கியூபிக் மீட்டர் அல்லது ஒவ்வொன்றும் 200 கன அடி கொண்டு ஐந்து சரக்குந்து சுமைகள்; அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

‘‘மேலும் குளங்களிலிருந்து அத்தகைய அளவு கனிமத்தை வெட்டியெடுப்பதற்கு மாவட்ட ஆட்சியரிடம் முன் அனுமதி பெறப்பட வேண்டும் அவ்வாறு பெறப்பட்ட அனுமதி கால அளவு, பத்து நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்’’.

“மேலும் இந்தச் செயல்நோக்கத்திற்காக பொதுப்பணி / ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையால் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே கனிமங்களை வெட்டியெடுக்க அனுமதி வழங்கப்பட வேண்டும்”;

இந்த நிலங்களிலிருந்து கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுவது கீழ்க்காணும் வரையறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும், அவையாவன:—

(i) குழிகளுக்கு இடையேயான தொலைவு அடியிலிருந்து அளக்கும்போது கிடைக்கும் கரையின் உயரத்திற்கு இரு மடங்கிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். மேலும் குழிகளின் ஆழம் ஒரு மீட்டர் அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டும் (ஒரு மீட்டர் ஆழம் கொண்ட குழிகள் நுண்துளைகளையுடைய பாறை அடுக்குகளை வெளிப்படுத்துவதற்காக இருப்பின் ஆழமானது ஒரு மீட்டருக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்);

(ii) குளக்கரையானது அங்கீகரிக்கப்பட்ட சாலையாக அல்லது வண்டிப் பாதையாக இருந்தாலன்றி கரை நெடுக மண், வண்டல் மண், சவுடு போன்றவற்றை ஏற்றக் கூடாது;

(iii) கடந்து செல்வதற்காகக் கரைகளை வெட்டக் கூடாது;

(iv) வெட்டியெடுக்கப்பட்ட மண், வண்டல் மண், சவுடு போன்றவற்றைக் குளத்தின் படுகைகள் மதகு அல்லது குளங்களின் ஏனைய யாதொரு கட்டுமானங்கள் மற்றும் தரைப்பாலங்கள் அல்லது கரைகளின் சரிவுகளில் குவித்து வைக்கக் கூடாது; மற்றும்

(v) வண்டிகளும் கட்டைவண்டிகளும் குளங்களின் அணைசுவர், மதகு அல்லது குளங்களின் ஏனைய கட்டுமானங்களின் யாதொரு பகுதியை நெருங்கி, அவற்றைச் சேதப்படுத்தக் கூடாது.

(2-A) (a) (2) ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரையறைகளுக்கு உட்பட்டு பொதுப்பணித் துறை / ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறை மதிப்பீடு செய்தவாறாக, கிடைக்கப்பெறும் கனிமங்களின் அளவு, 30 கியூபிக் மீட்டர் அளவுக்கு மேல் இருப்பின் (2) ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, துணைவிதி (2)இன் கீழ் மாவட்ட ஆட்சியரால் ***அரசிதழில்*** அறிவிக்கையிடப்படுகின்ற பொதுப்பணித் துறை அல்லது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள குளங்களின் படுகைகளிலிருந்து உண்மையான வீட்டுப் பயன்பாடு அல்லது வேளாண் செயல்நோக்கங்கள் நீங்கலாக வேறு நோக்கங்களுக்காக மண், வண்டல் மண், சவுடு போன்றவற்றை வெட்டியெடுப்பதற்கு இந்த விதிகளின் பிற்சேர்க்கை II—இல் குறிப்பிடப்பட்ட விலைகளில் வெட்டியெடுக்கப்பட வேண்டிய மேற்சொன்ன கனிமங்களுக்கான விலையையும் உரிமைக்கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடமிருந்து முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

இந்த அனுமதி பெறுவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் பின்வரும் ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூலத்தில் செலுத்தப்பட்ட ரூ. 1500/—க்கான திருப்பித்தர இயலாத விண்ணப்பக் கட்டணத்துடன் பிற்சேர்க்கை VI-C இல் உள்ள படிவத்தில் விண்ணப்பம் ஒன்றை அளிக்க வேண்டும் அந்த ஆவணங்களின் விவரம் வருமாறு:—

(i) மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் விண்ணப்பதாரர் அல்லது ஏதெனுமொரு நபர் அவருடன் இணைந்து.

(a) கனிமங்களை வெட்டியெடுப்பதற்கு ஏற்கனவே குத்தகை எடுத்துள்ள மற்றும்

(b) ஏற்கனவே விண்ணப்பித்து ஆனால் இன்னும் அனுமதி வழங்கப்படாமலுள்ள மற்றும்

(c) ஒரே நேரத்தில் விண்ணப்பித்துள்ள கனிமங்கள் வாரியான பகுதிகளின் விவரங்களைக் காட்டுகின்ற உறுதிமொழிப் பத்திரம்.

(ii) இந்த விதிகளின் பிற்சேர்க்கை VIII-இல் உள்ள படிவத்தில் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட செல்திறன்மிக்க சுரங்கத் தொழில் நிலுவையில்லா இசைவுச் சான்றிதழ் ஒன்று அல்லது விண்ணப்பதாரர் மாநிலத்தில் யாதொரு குவாரி குத்தகை எடுக்கவில்லை என்றும் அரசிற்கு செலுத்தப்பட வேண்டிய சுரங்கத்தொழில் நிலுவைத் தொகை ஏதுமில்லை என்றும் தெரிவிக்கின்ற உறுதிமொழிப் பத்திரம் ஒன்று,

(iii) விண்ணப்பதாரர்:

(a) நாளது தேதி வரையிலான வருமான வரி கணக்கு விவர அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார் என்றும்

(b) அவருக்கு விதிக்கப்பட்ட வருமான வரியைச் செலுத்தியுள்ளார் என்றும்

(c) 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 58/1962) வகை செய்யப்பட்டவாறான சுய மதிப்பீட்டின்படி வருமான வரி செலுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கின்ற உறுதிமொழிப் பத்திரம் ஒன்று.

(b) மாவட்ட ஆட்சியர், தகுதியான அனைத்து விண்ணப்பங்களையும், பின்வரும் அலுவலர்களைக் கொண்டு அவரால் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவிடம் அளிப்பார். அவர்கள் விவரம் வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | : | தலைவர் |
| 2. | சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் | : | உறுப்பினர் |
| 3. | திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி வரவமைப்பு) | : | உறுப்பினர் |
| 4. | செயற்பொறியாளர் (பொதுப்பணிகள் துறை) குளங்கள் | : | உறுப்பினர் |
| 5. | மாவட்ட வேளாண் இணை இயக்குநர் | : | உறுப்பினர் |
| 6. | நேர்விற்கேற்ப மாவட்டத்தின் மண்ணியல் மற்றும் சுரங்கத் தொழில் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர். | : | ஒருங்கிணைப்பாளர் |

(c) சிறப்புக் குழுவானது, தம்மிடம் விண்ணப்பங்கள் அளிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவற்றினைக் கூர்ந்தாய்வு செய்து தங்களது பரிந்துரைகளை மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கும்.

(d) சிறப்புக் குழுவானது, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்வதற்குக் கனிமங்களின் கருதப்பட்ட பயன்பாட்டின் தன்மை கனிமங்கள் வெட்டியெடுத்தல் மற்றும் கனிம வணிகத்தில் விண்ணப்பதாரரின் முன் அனுபவம் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றைக் கருதிப்பார்த்து வெட்டியெடுக்கப்பட வேண்டிய கனிம அளவு மற்றும் அளிக்கப்பட வேண்டிய அனுமதி கால அளவு பற்றிய திட்டவட்டமான பரிந்துரைகளை அளிக்கும். மேலும் வெட்டியெடுக்கப்பட்ட கனிமங்கள் தகுதியான விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் சமமாக வழங்குவதா அல்லது விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த அளவின்படி விகிதாச்சாரப்படி வழங்குவதா என்பதையும் சிறப்புக் குழுவானது தீர்மானிக்கும்.

(e) சிறப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் விண்ணப்பங்களுக்கு ஆணை பிறப்பிப்பார்.

(f) இத்துணை விதியின்கீழ் அனுமதி அளிக்கப்பட வேண்டிய கால அளவானது மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு இருக்கக் கூடாது.

(g) காரணம் எதுவாக இருப்பினும் கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்ட நபரானவர் கனிமங்களை வெட்டியெடுக்க இயலவில்லை உள்ளிட்ட யாதொரு காரணத்திற்காக இத்துணை விதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதியானது புதுப்பிக்கப்படவும் அல்லது நீட்டிக்கப்படவும் மாட்டாது. இச்செய்முறையில் செலவிடப்பட்ட யாதொரு தொகையை அல்லது பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு விண்ணப்பதாரர் உரிமையற்றவராவார் அனுமதி வழங்கப்பட்ட காலத்திற்குள் அனுமதி அளிக்கப்பட்ட அளவு கனிமங்கள் வெட்டியெடுக்கப்படாவிடின், பயன்படுத்தப்படாத கனிமங்களை வெட்டியெடுப்பதற்கு விண்ணப்பதாரர் உரிமையற்றவராவார்.

(h) அனுமதி பெற்றவர், அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமாக வெட்டியெடுத்தது கண்டறியப்படுமாயின் அல்லது அனுமதி வழங்குவதில் ஏதேனும் விதிமீறல்கள் செய்யப்பட்டிருப்பது கவனத்திற்குக் கொண்டுவரப்படுமாயின் அனுமதி ரத்துசெய்யப்படும். மேலும் குளம் அணுகுச்சாலை முதலியவற்றுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டிருப்பின் வெட்டியெடுக்கப்பட்ட அதிக அளவு மற்றும் குளங்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் அளவைப் பொறுத்து அவரிடமிருந்து தொகை வசூலிக்கப்படும் குளத்தைச் சீரமைப்பதற்கு ஏதேனும் தொகை செலவிடப்பட்டிருப்பின் அத்தொகையும் அனுமதி பெற்றவரிடமிருந்து வசூலிக்கப்படும்.

**சி.வி. சங்கர்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(2) பிற்சேர்க்கை VI-B–க்கு பின்னர், பின்வரும் பிற்சேர்க்கை இணைக்கப்பட வேண்டும். அதாவது:

**"பிற்சேர்க்கை–VI-C"**

*(விதி 12ஐக் காண்க)*

குளங்களில் மண், வண்டல், சவுடு முதலியவற்றை வெட்டி எடுத்தலுக்கான அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பம்.

(முப்படிகளில் பணிந்தனுப்பப்படவேண்டும்)

தேதி––––––––நாள்–––––20––––––––  .

அனுப்புநர்,

பெறுநர்,

ஐயா,

––––––––––––––ஆம் நாளிட்ட––––––––––––––––––––––––––ஆம் எண் மாவட்ட **அரசிதழ்** அறிவிக்கை தொடர்பாக தமிழ்நாடு **1959–**ம் ஆண்டு சிறு கனிம சலுகை விதிகளின் **12 (2–4)** ஆம் விதியின்கீழ் நான்/நாங்கள் இந்த விண்ணப்பத்தினை பணிந்தனுப்புகிறேன்/பணிந்தனுப்புகிறோம்.

**தேவைப்படும் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

**1.** விண்ணப்பதாரரின் பெயர் முழு முகவரியுடன்

**2.** (a) விண்ணப்பதாரர் ஒரு தனி நபரா**?** அல்லது ஒரு தனியார் நிறுவனமா**?** அல்லது ஒரு நிறுவனமா**?** அல்லது ஒரு கழகமா**?**

(b) விண்ணப்பதாரர் ஒரு தனி நபர் எனில் அவரது இனத்தைக் குறிப்பிடவும்.

(c) விண்ணப்பதாரர் ஒரு தனியார் நிறுவனம் அல்லது கழகம் எனில் இயக்குநர்கள், பங்குதாரர்கள், உறுப்பினர்களின் பெயரையும் இனத்தையும் குறிப்பிடவும். ஆவணச்சான்று அளிக்கப்பட வேண்டும்.

**3.** விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்ட விவரங்கள், கேட்புக் காசோலையின் எண் மற்றும் தேதியைக் குறிப்பிடவும்.

**4.** விண்ணப்பதாரரின் முகவரி ஆதாரம்.

விண்ணப்பதாரர் கீழேயுள்ள விவரங்களை குறிப்பிட்டு உறுதிமொழிப் பத்திரம் இணைத்துள்ளாரா**?**

**5.** (a) விண்ணப்பதாரர் நாளது வரையிலான வருமான வரி விவர அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள விவரங்கள்.

(b) விண்ணப்பதாரர் கணக்கிடப்பட்ட வருமான வரியை செலுத்திய விவரங்கள் மற்றும்

(c) விண்ணப்பதாரர், **1961** ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறாக தன்மதிப்பீட்டு அடிப்படையில் வருமான வரி செலுத்திய விவரங்கள்.

6. தமிழ்நாட்டில் ஏற்கனவே குவாரி குத்தகையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பகுதிகளின் விவரங்கள்

7. (a) மண்வெட்டியெடுக்கும் பணிக்கான நிலுவைகளைச் செலுத்தியது தொடர்பான சுரங்கத்தொழில் நிலுவைகள் தீர்வு சான்றிதழ் ஏதேனுமிருப்பின் அது இணைக்கப்பட்டுள்ளதா?

(b) விண்ணப்பிக்கும் நாளன்று, விண்ணப்பதாரர் ஏதேனும் குவாரி குத்தகை/ சுரங்கத் தொழில் குத்தகை பெற்றிருக்கவில்லையாயின், இது குறித்த உறுதிமொழி பத்திரம் ஒன்று அளிக்கப்பட்டுள்ளதா?

8. விண்ணப்பதாரர் வெட்டியெடுக்கக் கருதும் சிறு கனிமம்

9. இந்த கனிமத் தேவைக்கான செயல் நோக்கம்

10. வெட்டியெடுப்பதற்கு அனுமதி கோரப்படும் கால அளவு

11. தேவைப்படும் கனிம அளவு

12. விண்ணப்பிக்கப்பட்ட மொத்த பரப்பளவு

வெட்டியெடுப்பதற்கு அனுமதி கோர விண்ணப்பிக்கப்பட்ட பரப்பளவின் விவரங்கள்

| *மாவட்டம்* | *வட்டம்* | *கிராமம்* | *நில அளவை எண்* | *பரப்பளவு (எக்டேரில்)* |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* |

13.

மேலே அளிக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் சரியானவை என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரால் கோரப்படும் ஏனைய யாதொரு விவரங்களை அளிப்பதற்கு நான் / நாங்கள் தயாராக இருக்கிறேன் / இருக்கிறோம், என்றும் உறுதி அளிக்கிறேன்/ அளிக்கிறோம். வெட்டியெடுப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பிப்பது தொடர்பாக, தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு சிறு கனிமச் சலுகை விதிகளில் கண்டுள்ள விதித்துறைகள் பற்றியும் வெட்டியெடுப்பதற்கான நடைமுறைகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் பற்றியும் நான் / நாங்கள் நன்கு அறிவேன் / அறிவோம் என இதனால் நான் / நாங்கள் உறுதிமொழி அளிக்கிறேன் / அளிக்கிறோம்.

இடம் : தங்கள் உண்மையுள்ள,

நாள் : (விண்ணப்பதாரரின் கையொப்பம்)

**சி.வி. சங்கர்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

*[அரசாணை (நிலை) எண் 157, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (D2)த் துறை, நாள்: 1 அக்டோபர் 2015.]*

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1947) 38 ஆம் பிரிவைச் சேர்ந்த (1), ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் விதிகளுக்கு, பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 38ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

### திருத்தம்

மேற்சொன்ன விதிகளில், 43–ம் விதியில், துணைவிதி (2)–க்கு பின்னர், பின்வரும் துணை விதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது;–

"(3) உரிமையியல் நீதிமன்றத்தின் ஆணையைப் போன்றே, தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயமானது, மேற்சொன்ன சட்டத்தின் 2ஆம் பிரிவைச் சேர்ந்த (p) பகுதியில் வரையறுக்கப்பட்டவாறு, அதன் தீர்ப்பு அல்லது யாதொரு முடிவை நிறைவேற்றுவதற்கு, 1908 ஆம் ஆண்டு உரிமையியல் வழக்கு நடைமுறை விதித்தொகுப்பின் (மத்தியச் சட்டம் 5/1908) 21 ஆம் ஆணையின்கீழ் உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கும்."

**குமார் ஜெயந்த்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.